□□□□□□□ □□□□ : 40 □□□□ : 11 □□□□ 2009



15வது நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவரின் உரை

புதுதில்லியில் 15வது நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திருமதி பிரதீபா தேவிசிங் பாட்டீல் (04.06.2009) அன்று ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்

சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலை அடுத்து இங்கே அமைந்துள்ள 15வது நாடாளுமன்றத்தில் இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். அனைத்து உறுப்பினர்களுக்கும் குறிப்பாக, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஓட்டுப்போட்டு உங்களை தேர்ந்தெடுத்த லட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கக்கூடிய அரிய வாய்ப்பு இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு கிடைத்துள்ளது.

உங்களின் பணிகளை நீங்கள் தொடங்கும் அதேநேரத்தில் ஓட்டுப்போட்ட மக்களின் ஆசைகள், நம்பிக்கைகள், கனவுகள் உங்களை நிர்ணயிக்கும் என்று நான் உறுதியாக கூறுகிறேன்.

இனிவரும் ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு நாளையும் உங்களது மக்களின் நம்பிக்கைகளை செயலாக்குவதில் செலவிட வேண்டும். அப்போது உங்களது வாழ்க்கைக்கு மிகப்பெரிய அர்த்தம் கிடைக்கும்.

ஒரு பெண்ணை, குறிப்பாக தலித் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்ணை போட்டியில்லாமல் கௌரவத்துடன் சபாநாயகராக தேர்ந்தெடுத்தமைக்கு மக்களவை உறுப்பினர்களை பாராட்டுகிறேன். இதன் மூலம் இந்த உறுப்பினர்களின், இந்த அவையின் இந்திய ஜனநாயக பாரம்பரியத்தின் கௌரவம் பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது.

நிர்வாக மேம்பாடு

2004ஆம் ஆண்டில் அனைத்து வளர்ச்சிகளையும் உள்ளடக்கிய சமுதாயம், உள்ளடக்கிய பொருளாதாரத்தை தொலைநோக்கு இலக்காகக் கொண்டு எனது அரசு அமைந்தது. இந்த தொலைநோக்கு இலக்கை கொள்கைகளாக, திட்டங்களாக மாற்றுவதில் அரசு மிகவும் வெற்றிகரமாக செயல்பட்டுள்ளது. உள்ளடக்கிய கொள்கை வடிவமைப்பின் எதிரொளிப்பாக அரசு மிகச்சிறந்த அதிகாரத்தைப் பெற்றுள்ளது. இது உள்ளடக்கிய வளர்ச்சி, நியாயமான மேம்பாடு மற்றும் மதச்சார்பற்ற பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவுக்கான அதிகாரம் ஆகும். இதற்காக எனது அரசு கடுமையான உழைப்பை மேற்கொண்டுள்ளது.

உள்ளடக்கிய வளர்ச்சியில் தற்போது நடைபெற்று வரும் முன்னோடித் திட்டங்களை ஒருங்கிணைப்பதே எனது அரசின் முதல் கடமை ஆகும். இதற்கு அரசுக்கு புத்துணர்ச்சி ஊட்டுவதும், நிர்வாகத்தை மேம்படுத்துவதும் அவசியம்.

வளர்ச்சி பணி

தற்போது உலகளாவிய பொருளாதார மந்த நிலையால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சியை சரியான மேம்பட்ட பாதைக்கு கொண்டுவர சில சவால்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. வேலைவாய்ப்பை விரிவுபடுத்த தேவையான திறனை அரசுக்கு வழங்குவதற்கு உயர்ந்த வளர்ச்சி மிகவும் அவசியம். இந்த நாட்டின் மக்களின் கல்வி, சுகாதாரம், உள் கட்டமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்ய அதற்கேற்ற பொருளாதார வளங்களை அதிகரிப்பதும், அளிப்பதும் முக்கியம். எனது அரசு வளர்ச்சிப் பணிகளை முடுக்கி விட்டுள்ளன என்பதை உறுதி செய்யும் அதே நேரத்தில், அது சமூக மற்றும் மண்டல அளவில் மேலும் உள்ளடக்கியதாகவும், நேர்மையாகவும் இருக்கச் செய்யும்.

தற்போது எதிர்நோக்கும் சவால்களை எனது அரசு மிகவும் கவனமாக பார்த்து வருகிறது.

- அடுத்த 5 ஆண்டுகளில் அரசு 10 துறைகளுக்கு முன்னுரிமை வழங்க உள்ளது.
- உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் மத நல்லிணக்கத்தை பாதுகாத்தல்
- விவசாயம், உற்பத்தி மற்றும் சேவைத்துறை பொருளாதார வளர்ச்சியில் கால் பதித்தல்
- வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், ஊரக உள்கட்டமைப்பு, நகர்ப்புற சீரமைப்பு ஆகிய துறைகளில் தற்போதுள்ள முன்னோடித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.



உணவுப் பாதுகாப்பு மற்றும் திறன் வளர்த்தலுக்கு புதிய முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்

- வலுவான சமூக பாதுகாப்புடன் பெண்கள், இளைஞர், குழந்தைகள் நலன், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் வகுப்பினர், மலைவாழ் பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறன் படைத்தோர், முதியோர் நலனுக்கு உறுதியான நடவடிக்கை
- நிர்வாக சீரமைப்பு
- உள்கட்டமைப்பு பிரிவில் புதுமையை புகுத்துதல் மற்றும் நவீனமயமாக்கல், மேலும் முக்கியப் பிரிவுகளில் கூடுதல் திறன் வளர்த்தல்
- முன்னெச்சரிக்கையான நிதி நிர்வாகம்
- எரிசக்தி பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- ஆக்கப்பூர்வமான மற்றும் புதுமையான முறையில் சமூகத்துடன் இணைந்து செயல்படுதல்
- துறை மற்றும் கண்டுபிடிப்பு கலாச்சாரத்தை வளர்த்தல்

உள்நாட்டு பாதுகாப்பு

உள்நாட்டு பாதுகாப்பில் அரசு அதிகபட்ச கவனம் செலுத்தும். தீவிரவாதம் எந்த வகையில் இருந்து வந்தாலும் அதை அரசு கொஞ்சமும் சகித்துக் கொள்ளாது. திடீர் கிளர்ச்சிகள் கடும் நடவடிக்கை மூலம் கட்டுப்படுத்தப்படும். குறிப்பிட்ட கால அளவிற்குள் செயல்படுத்தக்கூடிய வகையில் உள்நாட்டு பாதுகாப்பு சவால்களை சமாளிக்க ஏற்கெனவே அரசு விரிவான திட்டத்தை தயாரித்துள்ளது. தேவையான உளவுத் தகவல்களை பரிமாறும் வகையில் பன்முகத்தன்மை கொண்ட அமைப்பு வலுப்படுத்தப்படும். மாநில அளவில் இந்த அமைப்பின் துணை மையங்கள் ஏற்படுத்தப்படும். தேசிய புலனாய்வு நிறுவனம் தற்போது செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்புக்கு தீவிரவாதம் தொடர்பான குற்றங்களை கையாளும் வகையில் அதிகாரம் வழங்கப்படும். மத்திய, மாநில காவல் துறைகள் மற்றும் புலனாய்வு அமைப்புகள் விரிவுபடுத்தப்படுவதோடு அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் மேம்படுத்தப்படும். தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் தேசிய தீவிரவாத எதிர்ப்பு மையங்கள் விரைவில் அமைக்கப்படும். முக்கிய இடங்களில் சிறப்பு அதிரடிப்படைகள் நிறுத்தப்படும். புலனாய்வுத் தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக் கொள்ளும் வகையில் சிறப்பு தகவல் மையங்கள் அமைக்கப்படும்.

காவல்துறை சீரமைப்பில் எனது அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. உள்நாட்டு பாதுகாப்பில் பொதுமக்களின் பங்கேற்பை உறுதிசெய்யும் வகையில் சமுதாய காவல்துறைகள் உருவாக்கப்படும். அதேநேரத்தில் எனது அரசு வடகிழக்கு, ஜம்மு காஷ்மீர் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் வன்முறையை கைவிடும் குழுக்களுடன் நியாயமான முறையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும்.

வன்முறை தடுப்பு சட்டம்

சமூக ஒற்றுமை எந்த விலை கொடுத்தாவது பாதுகாக்கப்படும். எனது அரசுக்கு கிடைத்துள்ள மக்கள் தீர்ப்பு மிகச்சரியானது. அதில் நாட்டின் மதச்சார்பின்மையை பாதுகாக்க வேண்டும் என்று மக்கள் தெளிவாக கூறியுள்ளனர். இந்த இலக்குடன் சமூக வன்முறை தடுப்பு மசோதாவிற்கு ஒப்புதல் பெற அரசு விரைவில் நாடாளுமன்றத்தை அணுகும்.

ராணுவம் பலப்படுத்தப்படும்

நமது தேசத்தின் கௌரவம், தியாகத்தின் மொத்த உருவம், வீரம் மற்றும் தேச ஒற்றுமையின் அடையாளம் ஆகியவற்றின் கலவைதான் நமது ராணுவம். நாட்டின் எல்லையை பாதுகாப்பதில் நமது பாதுகாப்புப் படைகள் உறுதியுடன் செயல்பட்டு வருகின்றன. நிலம், கடல், மற்றும் ஆகாய வழியாக எத்தகைய தாக்குதல்கள் வந்தாலும் அதை சமாளிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் ராணுவம் பலப்படுத்தப்படும். திடீர் தாக்குதல்களை சமாளிக்கவும் இன்றைய காலகட்டத்தின் அதிநவீன யுத்தங்களை சமாளிக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முன்னாள் ராணுவத்தினர் நலன் காப்பதற்கு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படும். கேபினட் செயலர் தலைமையிலான குழு - ஒரு பதவி - ஒரு ஓய்வூதியம் - குறித்து ஏற்கெனவே தனது பணிகளை துவக்கிவிட்டது. 2009-ஜுன் இறுதிக்குள் இக்குழு தனது பணியை முடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடையாள அட்டை

நாட்டு மக்களுக்கு சிறப்பு அடையாள அட்டை வழங்கும் திட்டம் 3 ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும். இது வளர்ச்சித்



திட்டங்கள் மற்றும் பாது காப்புப் பணிகளுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பொருளாதார வளர்ச்சி

கடந்த 5 ஆண்டுகளில் நிலையான வளர்ச்சி விகிதம் 8.5 சதவீதமாக இருக்கும் வகையில் எனது அரசு தொடர்ந்து செயல்பட்டது. இதனால் உயர்தரமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதம் மற்றும் சமூக பொருளாதார உள்கட்டமைப்பு ஆகியவை பரவலாக உருவாக்கப்பட்டது.

வேளாண் துறை

வேளாண் துறைக்கு புதிய உத்தியை எனது அரசு உருவாக்கியது. வேளாண்மையில் முதலீடுகள் அதிகரித்தன. மேலும் விவசாயிகள் மீதான வேளாண் கடன் கிட்டத்தட்ட ரூ.65 ஆயிரம் கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. வேளாண் பொருட்கள் கொள்முதல் விலையும் கணிசமாக உயர்த்தப்பட்டது. இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் வேளாண் துறை மீண்டும் புத்துணர்ச்சி பெற வழிவகுத்தது.

கல்வி

அதிக அளவிலான பள்ளிகள், கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மதிய உணவுத்திட்டம் ஏறக்குறைய 15 கோடி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஏறக்குறைய ஒரு கோடி குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டது. 16 ஆயிரம் மாணவர்களுக்கு கல்விக்கடன் வழங்கப்பட்டதுடன் மேல்நிலைக் கல்வி அளிக்கும் நிறுவனங்கள் முதலீடு செய்ய உத்வேகம் அளிக்கப்பட்டது.

சமூகப் பாதுகாப்பு திட்டம்

காப்பீட்டுத் திட்டங்கள், ஓய்வூதியம் வழங்கியதன் மூலம் பெரிய அளவில் சமூக பாதுகாப்பு அளிக்கப்பட்டதுடன், ஊரக பொது சுகாதார உள்கட்டமைப்பு சீரமைக்கப்பட்டது. பாதுகாப்புத் துறையில் பணியாற்றுபவர்கள், பொதுத்துறை நிறுவன ஊழியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் ஆகியோருக்கு புதிய சம்பள விகிதம் மாற்றி அமல்படுத்தப்பட்டது.

கடந்த 5 ஆண்டுகளாக எனது அரசு மாநிலங்களுக்கான உதவியை அதிகரித்து வழங்கியுள்ளது. அதிகப்படியான வளர்ச்சி விகிதம், அதிக அளவிலான வளங்களை உருவாக்கியதன் காரணமாக இந்த அனைத்து முயற்சிகளும் எளிதில் செயல்படுத்த முடிந்தது.

பொருளாதாரம் திருப்திகரமாக உள்ளது.

உலக அளவிலான பொருளாதார தேக்க நிலை காரணமாக நடப்பு நிதியாண்டில் வளர்ச்சி விகிதம் மந்தமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதுபோன்ற சூழ்நிலையை எதிர்நோக்கும் வகையில் எனது அரசு முக்கியமான 3 நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது தற்போது பலனளிக்கத் தொடங்கியுள்ளது. உலக நாடுகளில் ஏறக்குறைய இதுபோன்ற பொருளாதார தேக்க நிலை இருந்தபோதும் நமது பொருளாதாரம் பாதிக்கப்படாமல் திருப்திகரமாகவே உள்ளது.

அரசு சர்வதேச நாடுகளுடன் குறிப்பாக, ஜி-20 நாடுகளுடன் மும்முரமாக இணைந்து உலக அளவில் தேவையான பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பொருளாதார தேக்க நிலையால் பாதிக்கப்பட்ட சிறிய, நடுத்தர நிறுவனங்கள், ஏற்றுமதி, ஜவுளி, வர்த்தக வாகனங்கள், உள்கட்டமைப்பு மற்றும் வீட்டு வசதி ஆகிய துறைகளில் அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதனுடன் இணைந்து பொதுத்துறை, தனியார் பங்கேற்புடன் கூடிய உள்கட்டமைப்புத் துறைகளில் முதலீடுகளை உருவாக்க ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முதலீடுகளை கடனாக வழங்குவதில் சிக்கல்கள் உள்ளன. எனது அரசு இதுபோன்ற சிக்கல்களை தீர்க்க நூதனமான நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பு

கடந்த ஆண்டுகளில் வெளிநாட்டு முதலீடுகள் நம்நாட்டில் அதிகரித்துள்ளதன் காரணமாக நமது நாடு பயனடைந்து வருகிறது. முதலீடுகள் குறிப்பாக, வெளிநாட்டு நேரடி முதலீடுகள், தேவையான கொள்கை மாற்றத்தின் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். வங்கிகள் மற்றும் காப்பீட்டுத் துறைகளின் ஆதாரங்கள் சமூகத்திற்கு சிறந்த வகையில் பயன்படும்படி செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும். இந்த வகையில் பொதுத்துறை வங்கிகளின் நிதிநிலையை வலுப்படுத்த மறுமுதலீடு செய்யப்படும். மேலும், ஓய்வூதியத் துறையை ஒழுங்குப்படுத்த புதிய சட்ட விதிமுறைகளை உருவாக்க எமது அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் வேளாண்மை மற்றும் பாசனத்துறையில் செய்யப்பட்ட முதலீடுகள் மேலும் விரிவாக்கப்படும்.

எனது அரசு அறிமுகப்படுத்திய தேசிய ஊரக வேளாண் திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கம் போன்ற பெரிய திட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்படும்.

முன்னேற்ற திட்டங்கள்

எனது அரசு அறிமுகப்படுத்திய முன்னோடித் திட்டங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளது. இந்தத் திட்டங்களை அடுத்த 5 ஆண்டுகளில் ஒருங்கிணைத்து செயல்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டம் உருவாக்கப்பட்டதன் காரணத்தை நிரூபித்துள்ளது. உலக அளவில் கிராம மறு கட்டமைப்பை உருவாக்குவதற்கான பெரிய திட்டங்களில் ஒன்றாகவும், சிறப்பான சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை உருவாக்கும் திட்டமாகவும் இது உள்ளது.

இதன் பயன்பாடு வெளிப்படையாகவே தெரிகிறது. இந்த சட்டத்தின்படி மேலும் வேலைவாய்ப்பை எனது அரசு உருவாக்கும். நிலப்பகுதிகளை மேம்படுத்தும் திட்டம் வேறு பல திட்டங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும். மாவட்ட அளவில் இந்த திட்டத்திற்கான நிதி ஆதாரங்களை கண்காணிக்க குழுக்கள் அமைக்கப்படும்.

சுகாதாரம்

தேசிய ஊரக சுகாதார இயக்கம் கிராமப்புற பொது சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்த துவங்கியுள்ளது. இந்த இயக்கத்தின் மூலம் குழந்தை இறப்பு மற்றும் பிரசவத்தின்போது தாய் இறப்பு ஆகியவற்றைக் குறைக்க அடுத்த 5 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த திட்டம் உருவாக்கப்படும். தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்யும் பொதுத்துறை நிறுவனங்கள் நோய்த்தடுப்பு அளிக்கும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு அளிக்கும் வகையில் மாற்றியமைக்கப்படும்.

கல்வி துறையின் வளர்ச்சி

அடுத்த 5 ஆண்டுகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் சுகாதார பாதுகாப்பு அளிக்கும் வகையில் தேசிய சுகாதார காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படும். ஊட்டச்சத்து குறைபாடு, சுகாதாரத் திட்டங்களின் செயல்பாட்டிற்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உள்ளது. ஊட்டச்சத்து அளிக்கும் திட்டம் பஞ்சாயத்து அமைப்புகளின் நேரடி கண்காணிப்பில் செயல்படும் வகையில் மறுசீரமைக்கப்படும்.

அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் மூலம் (SSA) ஆரம்ப பள்ளிகளில் பயிலும் அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி வசதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மதிய உணவுத் திட்டத்தின் மூலம் இடைநிறுத்தம் தவிர்க்கப்பட்டுள்ளது. தரமான, இலவச, கட்டாய கல்வி அளிப்பதற்கான மசோதா நாடாளுமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

நடுநிலைக் கல்வி அனைவருக்கும் வழங்கப்படும். 11வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் புதிய உயர்கல்வி நிறுவனங்களின் மூலம் உயர்கல்வித் திட்டம் விரிவாக்கப்படும். இதன்மூலம் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள தேவைகளை முழு அளவில் சமாளிக்க முடியும்.

கடந்த 5 ஆண்டுகளில் கல்வி உதவித்தொகை, கல்விக் கடன் ஆகியவை தேவையான மாணவர்களுக்கு தேவையானபோது வழங்கப்பட்டது. இது மறுபரிசீலனை செய்யப்பட்டு மேலும் வலுப்படுத்தப்படும். சிறப்பான உயர் கல்வியை வழங்குவதற்கு 3 அடுக்கு கல்வித்திட்டத்தை உருவாக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. தேசிய அறிவுசார் குழுமம் அளித்துள்ள ஆலோசனையின் அடிப்படையில் இந்தத் திட்டம் உருவாக்கப்படும்.

2001-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, கல்வி அறிவு பெற்ற ஆண்களின் எண்ணிக்கை 75%- ஆகவும், பெண் கல்வி விகிதம் 54%- ஆகவும் உள்ளது. ஆண் கல்வி விகிதம் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த 5 ஆண்டுகளில் பெண் கல்வி விகிதத்தை அதிகரிக்க தேசிய பெண் கல்வி இயக்கம் ஏற்படுத்தப்படும். நமது சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் வெற்றி பெற பெண்கல்வி பெருமளவில் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமப்புற மேம்பாட்டு திட்டம்

கிராமப்புற உள்கட்டமைப்பு திட்டங்களை குறிப்பிட்ட கால அளவிற்குள் செயல்படுத்த ஐந்தாண்டுகளுக்கு முன்பு பாரத் நிர்மாண் திட்டத்தை எனது அரசு துவக்கியது. கிராமப்பகுதிகளில் சாலைவசதி, மின்சாரம், தொலைத்தொடர்பு ஆகியவற்றை ஏற்படுத்துவதில் முழு வெற்றி காணப்பட்டது. கிராமப்புற குடிநீர், வீட்டுவசதி ஆகிய திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை ஓரளவு எட்டியுள்ளன. மீதமுள்ள பணிகள் பாரத் நிர்மாண் திட்டத்தின் 2ஆம் கட்டத்தில் செயல்படுத்தப்படும். மேலும், இதற்கான இலக்கை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வீட்டு வசதி

2004-2009ஆம் ஆண்டில் இந்திரா வீட்டுவசதி திட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 60 இலட்சம் வீடுகளுக்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டன. அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு கோடியே 20 லட்சம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற குடிநீர்த்திட்டம் 2011ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு அடுத்த திட்ட காலத்தில் பஞ்சாயத்து அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படும்.

அடுத்த 5 ஆண்டுகளில் கிராமப்புற தொலைத்தொடர்புத் திட்டங்கள் 40%ஆக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 3 ஆண்டுகளில் அனைத்து பஞ்சாயத்து அமைப்புகளுக்கும் அகண்ட அலைவரிசை தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்தப்படும். கிராமப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு அரசின் சேவைகள் கிடைப்பதற்கு பஞ்சாயத்து அமைப்பு அளவில் பாரத் நிர்மாண் பொது சேவை மையங்கள் அமைக்கப்படும்.

கிராமப்புற மின்வசதி, நீர்ப்பாசனம், சாலை இணைப்பு ஆகிய திட்டங்களுக்கு புதிய இலக்கு நிர்ணயிக்கப்படும்.

நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்

கடந்த 4 ஆண்டுகளில் ஜவஹர்லால் நேரு தேசிய மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.50 000 கோடி அளவிற்கு ஒப்புதல் பெறப்பட்டு அதன் அடிப்படையில் நகர்ப்புற பகுதிகள் பெருமளவில் மாற்றியமைக்கப்பட்டது மக்கள் மத்தியில் அதிக வரவேற்பை பெற்றுள்ளதை நாம் அறிவோம்.

உள்கட்டமைப்பு, அடிப்படை சேவைகள், ஆட்சிமுறை சீர்திருத்தம், நகர்ப்பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது ஆகியவற்றை தொடர்ந்து இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்படும். நகர்ப்புற ஏழை மக்களுக்கு 15 லட்சத்திற்கும் அதிகமான வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழைகளுக்கும் வீட்டுவசதி ஏற்படுத்தும் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது அவசியமாகும். எனது அரசு குடிசைப்பகுதியில் வாழும் மக்கள், நகர்ப்புற ஏழை மக்கள் ஆகியோருக்கு வீட்டு வசதியை ஏற்படுத்த ராஜீவ் வீட்டு வசதி திட்டத்தை அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளது. ராஜீவ் வீட்டு வசதி திட்டத்தில் மானியத்துடன்கூடிய வட்டி விகிதத்துடன் நகர்ப்புற வீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுசீரமைப்பு இயக்கத் திட்டத்தின் மூலம் குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு கட்டித்தரப்படும். இந்தத் திட்டத்தை செயல்படுத்த ஆர்வம் காட்டும் மாநிலங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்த தேவையான உதவிகள் வழங்கப்படும். ராஜீவ் வீட்டு வசதி திட்டத்தின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் குடிசைகளே இல்லாத நகர்ப்பகுதிகளை உருவாக்க எமது அரசு முயற்சி மேற்கொள்ளும்.

உணவு பாதுகாப்பு திட்டம்

தேசிய உணவுப்பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்த புதிய சட்ட வடிவை உருவாக்க எனது அரசு உத்தேசித்துள்ளது.

அனைவருக்கும் உணவு கிடைப்பதை இந்த சட்டம் உறுதி செய்யும். கிராமப்பகுதிகள் மற்றும் நகர்ப்பகுதிகளில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சட்டப்படி மாதம் ஒன்றுக்கு கிலோ ரூ.3 வீதம் 25 கிலோ அரிசி அல்லது கோதுமை வழங்கப்படும்.

பெண்கள், இளைஞர்கள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், சிறுபான்மையினர், முதியோர் ஆகியோருக்கு பெருமளவிலான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உருவாக்க எனது அரசு மிகவும் பொறுப்புடன் செயல்பட்டு வருகிறது. பெண் கல்விக்கான தேசிய இயக்கம், வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு, தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்



படும் அனைத்து அமைப்புகளிலும் பெண்களுக்கு ஒதுக்கீடு வழங்கி சம வாய்ப்புகளை உருவாக்குவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்துள்ளது.

இளைஞர்களின் திறனை மேம்படுத்த திட்டம்

நமது மக்கள் தொகையில் 50%க்கும் அதிகமானோர் 25 வயதுக்கும் குறைவானவர்கள் ஆவார்கள்.

இந்த இளைஞர்களின் திறனை உரிய அளவு மேம்படுத்தி முதலீடு செய்தால் உலக அளவிலான வேலைத்திறனில் 4ல் ஒரு பகுதியை இந்தியாவால் அளிக்க முடியும்.

2022ஆம் ஆண்டு தொழில் திறன் பெற்ற 50 கோடி இளைஞர்களை உருவாக்கும் முயற்சியை அரசு இப்போதே துவக்கியுள்ளது. இதன்மூலம் இன வேறுபாடற்ற சமுதாயத்தை காண முடியும்.

ஷெட்யூல்டு பழங்குடியினர் மற்றும் பாரம்பரியமாக காடுகளில் வசிப்பவர்களுக்கான (வன உரிமைகளுக்கான அங்கீகாரம்) சட்டம், கண்காணிக்கப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து பத்திரங்களும் வழங்கப்படும்.

சிறுபான்மையினர் நலன்

சிறுபான்மையினர் நலனுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படும். அரசுப் பணிகள் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு சம வாய்ப்பை உறுதி செய்வதில் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டமும் சச்சார் கமிட்டி பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான பணிகளும் ஓரளவு வெற்றி கண்டுள்ளன. வக்ஃபு வாரிய நிர்வாகத்தை நவீனப்படுத்தவும் ஹஜ் பயண நிர்வாகத்தை சீரமைக்கவும் சம வாய்ப்பு கமிஷனை அமைக்கவும் அரசு பாடுபட்டு வருகிறது.

நிலத்தை கையகப்படுத்துவதால் பாதிக்கப்படும் விவசாயிகள் மற்றும் இடம் பெயர்வோரின் நலனை பாதுகாப்பதற்காக நிலம் கையகப்படுத்துதல் சட்ட திருத்த மசோதா மறுவாழ்வு மற்றும் மாற்று குடியிருப்பு மசோதா ஆகியவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இவை நாடாளுமன்றத்தில் திரும்பவும் அறிமுகப்படுத்தப்படும். பட்ஜெட் கூட்டத் தொடரிலும் நிறைவேற்றப்படும்.

சமூக பாதுகாப்பு திட்டம்

முதியோர் ஓய்வூதியம், ஊனமுற்றோர், விதவைகளுக்கான உதவித்தொகை போல நிலமற்றத் தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், கள் இறக்குவோர், தோல்துறைத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள் ஆகியோருக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஆணையத்தின் அறிக்கைகள் அடிப்படையில் அரசின் உயர்மட்டத்தில் சீர்திருத்தப்பணிகள் அதிகாரப்பரவல், நிர்வாகத்தில் பெண்கள், இளைஞர்களின் பங்கை உறுதிப்படுத்துவது, பொது பொறுப்புணர்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும்.

அடுத்த 100 நாட்களில் எனது அரசு மேற்கொள்ளவிருக்கும் முன் முயற்சிகளாவன :

★ பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது

★ பஞ்சாயத்துகளிலும் நகர உள்ளாட்சி அமைப்புகளிலும் 50 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வருவது

★ மத்திய அரசுப் பணிகளில் அதிக பெண்களை அமர்த்த நடவடிக்கை

★ பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் தேசியத் திட்டம்

★ கங்கை நதி உள்ளிட்ட நதிகளை தூய்மைப்படுத்தும், அழகுபடுத்தும் திட்டத்தில் தன்னார்வ தேசிய இளைஞர் படையை ஈடுபடுத்துவது

★ பின்தங்கிய மண்டலங்களுக்கான உதவி நிதியத்தை மறு சீரமைப்பது, தேசியத் திட்டங்களை நிர்வகிக்க பஞ்சாயத்து ராஜ் அலுவலர்களுக்கு அடுத்த மூன்றாண்டுகளுக்கு பயிற்சி அளிப்பது

★ அனைத்துத் தகவல்களையும் பொதுவில் வைக்க வகை செய்யும் பொது தகவல் கொள்கை

★ தேசிய கிராமப்புற வேலை உத்திரவாதத் திட்டத்தில் வெளிப்படைத் தன்மை, பொறுப்புணர்வை கூட்டுவது, மாவட்ட அளவிலான குறை தீர்ப்பு அமைப்பு

★ சட்டத்திருத்தத்தின் வாயிலாக தகவல் உரிமையை வலுப்படுத்துவது

★ தேசியத் திட்டங்களுக்கான பொது பொறுப்புணர்வை வலுப்படுத்த சுயேச்சையான மதிப்பீட்டு அலுவலகத்தை திட்டக் குழுவின் வழிகாட்டுதலின்படி அமைத்தல்

★ கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு, சுற்றுச்சூழல், உள்கட்டமைப்பு ஆகிய துறைகளின் ஆண்டறிக்கைகள் தேசிய விவாதத்திற்காக மக்கள் முன் வைக்கப்படும்.

★ ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற சீரமைப்புத் திட்டத்தில் வளர்ச்சிப் பணிகளில் தன்னார்வ தொழில்நுட்ப வல்லுனர்களை ஈடுபடுத்துவது.

★ இணையதள பரிமாற்றம் வாயிலாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட அரசு உதவி செய்வது, விண்ணப்பங்களில் வெளிப்படைத் தன்மையை பேணுவது

★ அஞ்சலகங்கள், வங்கிக் கணக்குகள் மூலம் கல்வி உதவித் தொகை, பிற உதவித்தொகைகளை வழங்குவது (படிப்படியாக ஸ்மார்ட் கார்டு மூலமாகவும்)

★ தொழில் பரிவர்த்தனைக்கு ஏற்ற வகையில் அஞ்சலகங்களையும் வங்கிகளையும் தொழில்நுட்ப ரீதியாக மாற்றி அமைப்பது.

★ அடுத்த மூன்றாண்டுகளில் அனைத்து பஞ்சாயத்துகளிலும் அமைக்கப்பட உள்ள பாரத் நிர்மாண் பொதுச்சேவை மையங்கள் வாயிலாக மின்னணு நிர்வாகம்

★ மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி ஆகிய சமூகப் பணிகளில் கடமை உணர்வை அதிகரிக்க மாதிரி பொதுச் சேவைகள் சட்டம் உருவாக்கப்படும்.

★ சுகாதாரத் துறை சீரமைப்புக்காக இத்துறையில் மனித வளத்திற்கான தேசிய கவுன்சிலை உருவாக்குவது

★ யஷ்பால் குழு, தேசிய அறிவு சார் ஆணையம் ஆகியவை பரிந்துரைத்தவாறு உயர் கல்விக்கான தேசிய கவுன்சிலை உருவாக்குவது

★ 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள 14 பல்கலைக் கழகங்களுக்கு உலகெங்கிலும் உள்ள வல்லுனர்களை ஈர்க்க "பிரெயின் கெயின்" கொள்கையை உருவாக்குவது

★ நீதித்துறை சீர்திருத்தத்திற்கான வரைவு ஆறு மாதங்களில் கொண்டு வரப்பட்டு அமலப்படுத்தப்படும்

★ வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் பட்டியலுக்குப் பதிலாக பல்வேறு நலத்திட்டங்களுக்கும் பயன்படும் வகையில் பயனாளிகளுக்கான அடையாள அட்டை

★ பிரதமர் அலுவலகத்தில் உள்ள திட்ட கண்காணிப்பு அமைப்பு முக்கிய தேசிய திட்டங்களை கண்காணிக்கும்.

★ முக்கிய நலத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அமைச்சர்கள் காலாண்டுக்கு ஒரு முறை ஊடகம் வாயிலாக அறிக்கை அளிப்பர் (பாரத் நிர்மாண் காலாண்டு அறிக்கைகள்)

அடுத்த ஐந்தாண்டுகளுக்கு உள்கட்டமைப்புத் துறையில் முக்கிய கவனம் செலுத்தப்படும். நிலுவையில் உள்ள பொது, தனியார் கூட்டுத் திட்டங்களுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்கப்படும். இத்திட்டங்கள் முதலீட்டாளர் வசதிக்கு ஏற்றவாறு சீரமைக்கப்படும். வடகிழக்குப் பிராந்தியம் ஜம்மு காஷ்மீரில் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

பொதுத்துறை நிறுவனங்களில் அரசு முதலீடு 51 சதவீதத்திற்குக் குறையாது. இந்நிறுவனங்களை பட்டியலிடுவதற்கான திட்டம் உருவாக்கப்படும்.

மானியங்கள் உண்மையான பயனாளிகளை சென்றடைவதற்காக தேசிய அளவில் ஒருமித்த கருத்து உருவாக்கப்படும். அதற்கேற்ப கொள்கை முடிவுகள் மாற்றி அமைக்கப்படும்.

சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான வரித் தொடர்பான நோக்கு தீவிரமாக பரிசீலிக்கப்படும். நமது நாட்டுக்கு வெளியே ரகசிய வங்கிக் கணக்கில் உள்ள இந்திய குடிமக்களின் சட்ட விரோதமான பணத்தை அந்தந்த நாடுகளுடன் கலந்து பேசி இங்கு கொண்டுவர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மின்சக்தித் துறையில் ஆண்டுதோறும் கூடுதலாக 13 ஆயிரம் மெகாவாட் உற்பத்தித் திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பல்வேறு நாடுகளுடன் இணைந்து சர்வதேச சிவில் அணுசக்தி ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும். உள்நாட்டிலுள்ள யுரேனிய வளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஃபாஸ்ட் பிரீடர், தோரியம் அணு உலைகளை உள்நாட்டில் வடிவமைக்கும் பணி தொடர்கிறது.

விண்வெளித் துறையும் அறிவியல் தொழில்நுட்பத் துறையும் மேலும் வலுப்படுத்தப்படும்.

இந்த ஆண்டு இறுதியில் நீர் ஆற்றல் மேம்பாடு நிலைத்த வேளாண்மை நிலைத்த உறைவிடம் ஆகியவைகளுக்கான தேசிய திட்டம் துவக்கப்படும். அண்மையில் அமைக்கப்பட்ட தேசிய கங்கை நதி ஆணையம் இந்நதியை தூய்மைப்படுத்தும் அழகுபடுத்தும் பணியில் ஈடுபடும்.

தேசிய நலன், மண்டல சுயாட்சி தற்சார்புடன் முடிவெடுப்பது ஆகியவற்றை வலியுறுத்தும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை அவ்வாறே தொடரும். சார்க் நாடுகளுடன் இணைந்து இம்மண்டலத்தின் நிலைத்ததன்மை,வளர்ச்சி, வளம் ஆகியவற்றுக்காக இந்தியா பாடுபடும். அண்டை நாடுகளுடன் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அரசு நேர்மையாக உழைக்கும்.

வெளிநாட்டுக் கொள்கை

அந்நாட்டில் இருந்துகொண்டு இந்தியாவின் மீது தாக்குதல்களை ஏவிவிடும் தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் உண்மையான நடவடிக்கை எடுக்குமானால் அந்நாட்டுடனான உறவினை இந்தியா மறு சீரமைக்கும். நிரந்தர அரசியல் தீர்வுக்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன் முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்கும். அந்த முயற்சிகள் அங்குள்ள அனைத்தின மக்களும், குறிப்பாக தமிழர்கள் பாதுகாப்புடனும் சுய மரியாதையுடனும் வாழ்வதை உறுதி செய்ய வேண்டும். இலங்கையில் ஏற்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறு வாழ்வளிக்க இந்தியா உரிய பங்களிக்கும். பல கட்சி ஜனநாயக ஆட்சி நடக்கும் நேபாளம், பங்களாதேசுடன் இந்தியா இணைந்து பணியாற்றும். பூடான் மாலத்தீவுடன் உறவினை மேம்படுத்தும். ஆப்கானிஸ்தான் மறுசீரமைப்புக்கு தொடர்ந்து உதவும்.

வளர்ந்து வரும் நாடுகளுடன் இணைந்து எனது அரசு தொடர்ந்து செயல்படும். மேற்காசிய நாடுகளில் அமைதியை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. வளைகுடா நாடுகளுடனான பாரம்பரிய ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும். இந்தோ ஆப்பிரிக்கா முதல் மாநாட்டின் மூலம் ஆப்பிரிக்காவுடனான உறவு மீண்டும் புத்துணர்வு பெற்றுள்ளது. தெற்காசிய நாடுகள் பசிபிக் நாடுகள் மத்திய ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளுடனான உறவு ஒருங்கிணைக்கப்படும்.

உலக அளவில் முக்கியமான பொருளாதார சமூக பண்பாட்டுத் துறைகளில் 2.5 கோடி இந்தியர்கள் பொறுப்பு வகிக்கின்றனர். இதை மேலும் வலுப்படுத்த எனது அரசு முயற்சி மேற்கொள்ளும். வெளிநாடு வாழ் இந்தியர்களின் நலனுக்காக எனது அரசு தொடர்ந்து பாடுபடும். சர்வதேச நாடுகளின் உறுப்பு நாடாக இந்தியா செயல்படுவதுடன் இதர நாடுகளின் பொதுவான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் குறிப்பாக சர்வதேச தீவிரவாதம், உலகளவிலான பொருளாதார தேக்க நிலை தட்பவெட்ப நிலை மாற்றம் மின்சக்தி பாதுகாப்பு பல்வேறு துறைகளில் சீர்திருத்தங்கள் ஆகியவற்றை தீர்க்க எனது அரசு அனைத்து உதவிகளையும் அளிக்கும்.

புதிய கண்டுபிடிப்புக்கு முக்கியத்துவம்

மாண்புமிகு உறுப்பினர்களே, நாம் இன்று ஒரு அறிவு சார் சமூகத்தினிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதில் எனது அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. நூதன கண்டுபிடிப்பு, படைப்பாற்றல், வேலைத்திறன் ஆகியவை மக்கள் மற்றும் நாட்டின் அத்தியாவசியமான ஒன்றாகும் என்பதுடன் இவைதான் இதன் வளங்கள் என்பதையும் புரிந்து கொண்டுள்ளது.

மதம், மண்டலம், மொழி, இனம், பாலின வேறுபாடு போன்ற குறுகிய சுவர்களை உடைத்தெறிந்து நமது இளைஞர்கள் முன்னேறி வருகிறார்கள். அவர்களின் நம்பிக்கையை நாடு முதலீடு செய்ய வேண்டும். நமது லட்சோப லட்ச மக்களின் நூதன கண்டுபிடிப்புகள், படைப்பாற்றல் திறனை வெளிக் கொணரும் வகையில் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் கொள்கைகளை உருவாக்க எனது அரசு உறுதி பூண்டுள்ளது. அடுத்த பத்தாண்டுகள் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆண்டுகளாகும். நமது பல்வேறு சவால்களை சமாளிப்பதற்கு இது போன்ற கண்டுபிடிப்புகள் தீர்வாக அமையும்.

இன்றைய இளைய சமுதாயம் துடிப்புமிக்க சமுதாயமாக உருவெடுத்துள்ளதன் காரணமாக உடனடி மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. இவர்களின் கனவை நனவாக்கும் திட்டங்களுக்கு எனது அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. அடுத்த ஐந்தாண்டுகளின் ஒவ்வொரு நாளையும் இவர்களின் கனவை நனவாக்கும் முயற்சியில் நம்மையும் ஈடுபடுத்திக் கொள்வோம்.

□□